# ஆத்மஜோதி




பங்குனி—சித்திரை 1975

# ஆத்மஜோதி

ஓர் ஆத்மீக மாதவெளியீடு



எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

— சுத்தானந்தர்

ஜோதி 27 ஆனந்த ௵ பங் - இராக்ஷத ௵ சித் 1-ம் ௳ (14-4-75) சுடர் 5-6

## பொருளடக்கம்


| | |
|---|---|
| சாந்தலிங்க அடிகள் பாமாலை | 65 |
| ஸ்ரீமத் தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் | 67 |
| சமய மலர்ச்சி | 73 |
| ஏனிந்த வாழ்வு | 75 |
| முழுஞான வீரன் | 76 |
| சிரத்தை | 79 |
| ஆத்மபோதனை | 82 |
| திருமுறைகள் காட்டும் திருநெறி | 87 |
| அணிமலர்க் கவிதைபாட அருளிய தமிழ் வடிவன் | 90 |
| ஸ்ரீ மீனாக்ஷி பஞ்சரத்ன ஸ்தோத்திரம் | 92 |
| முப்பொருள் விளக்கம் | 93 |
| அன்பே சைவத்தின் அடிப்படை | 95 |



ஆத்மஜோதி சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆயுள்சந்தா | 100—00 |
| வருடச்சந்தா | 5—00 |
| தனிப்பிரதி சதம் | 50 |

கௌரவ ஆசிரியர்: திரு. க. இராமச்சந்திரா

பதிப்பாசிரியர்: திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்

நாவலப்பிட்டி. [போன்: 353]

# சாந்தலிங்க அடிகள் பாமாலை

[செந்நாப்புலவர் திரு. அடிகளாசிரியர்]

விண்விளங்கி ஒளிவீசி அறிவை நல்கும்
விரிகதிரும் தண்மதியும் விளக்கமாக
மண்விளங்கிப் பொருளையெலாம் பாகம் செய்யும்
மாண்புடைய நல்லெரியும் மக்கட்கெல்லாம்
கண்விளங்க இருளோட்டிக் கதியைக் காட்டும்
கலைநிறைந்த சாந்தலிங்கன் அருள்செய்நூலோ
எண்விளங்க அறியாமை இருளை ஓட்டி
எல்லோர்க்கும் நற்கதியே ஈயும் கண்டீர்

இப்பாட்டு, கதிரவன் முதலிய ஒளிகள் புறவிருளை ஓட்டிப் போக்குவரவு புரிய உயிர்கட்கு வழியினைக் காட்டும்; சாந்தலிங்க அடிகள் செய்தருளிய நூல்களோ எனில் உள்ளிருளாகிய அறியாமை இருளினை ஓட்டி மீண்டுவருதலில்லாத நற்கதி ஒன்றினையே உயிர்கட்குக் காட்டும் என்பதனை விளக்குகின்றது. எண்விளங்க, என்றால் உயிர்களின் அறிவாகிய எண்ணம் விளங்க என்பது பொருள்.

அன்பென்னும் ஒருமுதலில் ஆர்வம் போற்றி
அகப்பற்றும் புறப்பற்றும் அடைந்தோ ராகி
துன்பென்னுஞ் சிற்றின்பச் சுழலிற் சிக்கித்
துயரினையே அடைந்திருக்கும் மனிதர் யாரும்
அன்பென்னும் ஒருமுதலில் அருளைத் தோற்றி
அகப்பற்றும் புறப்பற்றும் அற்றா ராகி
இன்பென்னும் நெறிதனையே எய்தி வாழ
இயற்றுவது சாந்தலிங்கன் இசைத்த நூலே.

பற்றிற் சிக்கி உழலும் யாவரும் பற்றற்று பேரின்ப நெறியை எய்திவாழுமாறு செய்வது எதுவெனில் அது சாந்தலிங்க அடிகள் செய்தருளிய நூலேயாகும் என்பதனை இப்பாட்டு விளக்குகின்றது.

கொல்லாமை எனும்நெறியை முதற்கண்பற்றிக்
குவலயத்தே எவ்வுயிர்க்கும் அருளைவைத்துப்
பொல்லாத ஆசையெனும் அராகந் தன்னைப்
பொருந்தாத வைராகந் தன்னைப்பெற்றுப்

பல்லோரும் ஏற்கும் வகை பராதி மூன்றின்
பண்புணர்ந்து பரனடியே பற்றிவாழ
எல்லோர்க்கும் நூல்செய்தான் சாந்தலிங்கன்
ஈடில்லாப் பொதுநூலே இவன்நூலெல்லாம்.

கொல்லாமை என்னும் நெறியைப்பற்றி எல்லா உயிர்கட்கும் அன்பு பூண்டொழுகச் செய்யும் கொலை மறுத்தல் என்னும் நூலையும், உலகப் பொருள்களின்மேல் ஆசை அற்றொழுகச் செய்யும் வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம் என்னும் நூல்களையும், சமயவிரோதக் கொள்கைகளை உணராமல் எல்லோர்க்கும் ஏற்குமாறு முப்பொருள் உண்மையை உணரச் செய்யும் அவிரோத உந்தியார் என்னும் நூலையும் சாந்தலிங்க அடிகள் செய்தருளினர்.

கற்றின்பம் அடைவதற்கெண் சுவைகள் வைத்துக்
காசினியோர் இன்பதுன்பக் கதையைக் கூறிச்
சிற்றின்பத் துறைபலவும் சிறந்து தோன்றச்
சிறுநூலும் பெருநூலும் செய்யானாகிப்
பற்றின்பால் மனம்நீங்கப் பற்றற்றானைப்
பற்றுதற்கே நூல்செய்த சாந்தன்றன்னை
மற்றின்பம் விரும்பாமல் ஞான நூலின்
மாண்புரைக்கும் புலவனென்றே மதிக்கின்றேமே.

பலவகை நூல் செய்த புலவருள் சாந்தலிங்க அடிகள் ஞானநூல் செய்த புலவர் என்பதைக் குறிக்கிறது இப் பாட்டு.

எட்டான சுவைகளுக்கும் ஏற்றமாகி
இலங்குகின்ற நற்சாந்தம் எங்கும் கொட்டக்
கட்டான தமிழ்ச் சொல்லால் சுருங்கச் சொல்லிக்
காதின்வழி செல்வதற்கே இனிய யாப்பால்
தெட்டான பொய்ப்பொருளில் தீர்ந்தெல்லோரும்
திறமுடைய மெய்ப்பொருளைத் தேர்ந்து வாழ
ஒட்டான நூல்செய்தான் சாந்தலிங்கன்
உணர்பவர்க்கு வீடொன்றே உறுதியாமே.

சாந்தலிங்க அடிகள் செய்தருளிய நூல்களுக்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நூற்பயன் நான்கினுள் வீடே பயன் என்பதைக் குறிக்கிறது இப்பாட்டு.

# ஸ்ரீமத் தவத்திரு
# சாந்தலிங்க சுவாமிகள்

— ஆசிரியர் —

பண்டைத் தமிழகத்திலிருந்த நாடுகளில் கொங்கு நாடும் ஒன்றாகும். இது இன்றைய கோயமுத்தூர் சேலம் மாவட்டங்கள் அடங்கிய நிலவெளியாகும். பேரூர், அவிநாசி, பவானி, கொடுமுடி ஆகியவை இம்மாவட்டத்தின் சிறப்பான புண்ணியத்தலங்களாகும். பேரூர் கோயில் கோயம்புத்தூருக்கு மேற்கே மூன்று மைல் தொலைவில் உள்ளது. இதற்கு அருகே ஓடும் ஆற்றுக்குக் காஞ்சியாறு என்று பெயர். இத்தலம், தனக்கெனத் தேவாரம் இல்லாமல் பிறத் தலத் தேவாரப் பதிகங்களுள் வைத்துப் பாடப் பெறுவதாகிய வைப்புத் தலங்களுள் ஒன்று. இதனைச் சுந்தரர் ஒரு தேவாரத்தில், "பேரூர் உறைவாய் பட்டிப்பெருமான் பிறவா நெறியானே" என்று குறிப்பிடுகின்றார்.

இது அரசவனம், பிறவாநெறி, மேலைச் சிதம்பரம் முதலிய பெயர்களை உடையது. கோயிலுக்கு ஆன்பட்டி என்றும், இறைவனுக்குப் பட்டீஸ்வரன் என்றும், அம்மைக்குப் பச்சைநாயகி என்றும், நடராசப் பெருமான் எழுந்தருளிய சபைக்கு அரவம்பலம், வெள்ளி அம்பலம் என்றும் பெயர். பட்டீசர் கோயில் வாயிலிலேயே ஒரு புளியமரம். நல்லமேடையிட்டுக்கட்டி மரத்தைப் பாதுகாத்து வருகிறார்கள். அதுதான் பிறவாப்புளி. அது என்னவென்றால் அந்த மரத்தின் கொட்டைகளை முளைக்கப்போட்டால் முளைக்கிறதே இல்லையாம். அந்தப் புளியமரத்துக்கு இனிப் பிறவியே கிடையாது என்பது இறைவன் ஆஞ்ஞை போலும். அதனால் அது பிறவாப் புளியாகவே நின்றுகொண்டிருக்கிறது. இனிக் கோயிலுக்கு வடக்கே ஆற்றங்கரையில் உள்ள வடகயிலாயம் என்னும் சிற்றாலயத்திற்கு வந்தால் வெளிமுற்றத்தில் ஒரு பனைமரம் நிற்கிறது. அதற்கு இறவாப்பனை என்று பெயர்.

இந்தப் பனையின் பட்டையை இடித்துக் கஷாயம் போட்டுக் குடித்தால் தீராத வியாதி எல்லாம் தீருகிறது. இப்படி மக்களை அவர்களுக்கு வரும் நோயினின்றும் காப்பாற்றி இறவாது காக்கும் பெருமையுடையது. இந்த இறவாப்பனை அந்த பிறவாப்புளி இரண்டுமே பட்டீசர் பெருமையை இன்றும் விளக்கிக் கொண்டிருக்கின்றன.

முன்பெல்லாம் பெயருக்கேற்ப ஊர் பெரிதாகத்தான் இருந்தது. இப்போது தன் பெருமையைக் கோயமுத்தூருக்கே அளித்துவிட்டு தான் சிறிதாகிவிட்டது போலும். பெரியவர்களின் பண்பு அதுதான் போலும். கோயிலின் வடபக்கம் பெரியதொரு மண்டபம். அது 94 அடி நீளமும் 38 அடி அகலமுங் கொண்டது. இம்மண்டபத்தை 16 அடி உயரமுள்ள கற்றூண்கள் தாங்கிநிற்கின்றன. இந்த மண்டபத்தை ஒட்டித்தான் சிற்றம்பலம் இருக்கிறது. அங்குதான் நடராஜர் அன்னை சிவகாமியுடன் கொலுவீற்றிருக்கிருர். இந்த நடராஜனை ஆடவல்லான் என்றே அழைத்திருக்கின்றனர். மேலைச்சிதம்பரம் என்று பெயர் பெற்றதற்குக் காரணமும் இந்த ஆடவல்லானேதான். இங்குள்ள பிரம தீர்த்தத்தில் சிலநாள் நீராடிவரின் கொடிய பைத்தியமும் வேறுசில பிணிகளும் நீங்கி விடுகின்றன. இதில் இட்ட பித்தளை, செப்புப் பாத்திரங்கள் பிற நீரில் ஒளி மழுங்கல்போல் மழுங்காமல் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றன.

சுந்தரர் பட்டீசரைத் தரிசிக்கச் சென்றபோது தோழமையால் ஒரு விளையாடலை உன்னிய இறைவர் தாமும் அம்பிகையும் பிறபரிவாரங்களோடு கோயிலில் இல்லாமல் அருகிலே உள்ள வயலில் பள்ளனும் பள்ளியுமாக வேடங்கொண்டு நாற்று நடவுத் தொழிலில் மேற்கொண்டிருந்தனர். சுந்தரர் திருக்கோயிலில் வந்து இறைவரை எங்கும் காணுமையால், இறைவரைத் தேடிச் சென்று வயலிலே கண்டார். இறைவரை அம்பலத்துக்கு அழைத்துச் சென்று அங்கு ஆட வைக்கிருர் சுந்தரர். இச்செய்தியைத் தலபுராணம் பின்வருமாறு கூறுகின்றது. "மறையவன் அரசன் செட்டி தன்

தாதை...............பறையனு முன்னர் ஆன நீ இன்று பள்ள ுணமை தெரிந்தேன் யான்''

சுந்தரர் பேரூர் இறைவனைப் பாடாதிருந்திருக்க முடியாது. ஆனல் அப்பாடல்கள் கிடைக்கவில்லை. பேரூர்ப் பெருமானை நினைத்து தில்லைச் சிற்றம்பலத்திலே பாடிய பாடலைப் படித்து மகிழ்வோம்.

பாரூரும் அரவு அல்குல் உமைநங்கை அவள் பங்கன்
பைங்கண் ஏற்றன்
ஊர் ஊரான் தருமனர் தமர்செக்கில் இடும்போது
தடுத்து ஆட்கொள்வான்
ஆரூரன் தம்பிரான் ஆரூரன் மீ கொங்கில்
அணிகாஞ்சிவாய்ப்
பேரூர்ப் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே
பெற்றும் அன்றே.

பேரூருக்கு இத்தகைய சிறப்போடு சாந்தலிங்க சுவாமிகளின் சமாதியும் மிகப்பெருமையை இன்று அளித்துக்கொண்டிருக்கிறது. கோயமுத்தூர் கோடிக்கணக்கான மக்களை உடைமையாலும், தொழில் நிலையங்களாலும், கல்லூரிகளாலும் சிறப்புற்று விளங்கினலும் இத்தனைபேரும் சென்று சாந்திபெறும் இடம் சாந்தலிங்கசுவாமிகளின் திருக்கோயில் என்றல் அதுமிகைப்படுத்திக் கூறுவதொன்றல்ல. ஸ்ரீமத் சாந்தலிங்கசுவாமிகள் இத்தலத்தில் வாழ்ந்தமையே தலத்திற்கு ஒருபெருமை.

இவர் கி. பி. 17ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர். வீரசைவர். திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்து சிவப்பிரகாச அடிகளாரிடம் உபதேசம் பெற்றவர். தமிழகத்தில் வீரசைவசமயத்தை விளங்கச் செய்த மயிலம்—பொம்மபுரம் ஆதீனத்துக் குருவாகிய சிவஞானபாலய சுவாமிகளிடத்தும், துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகளிடத்தும் தொடர்பு கொண்டவர். துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகளின் தங்கை ஞானம்பிகை அம்மையாரைத் திருமணம்

செய்துகொண்டு இல்லறத்தில் இருந்து பின் துறவு பூண்டவர்.

சாந்தலிங்க அடிகளார் தலயாத்திரை தொடங்கினுர். தலயாத்திரையின் முக்கிய நோக்கம் குரு ஒருவரைத் தேடிக் கொள்ளுதலோ அன்றி சாதனைக்கேற்ற ஒரு இடத்தைத் தெரிந்து கொள்வதேதான். இதனைத் தாயுமானவ சுவாமிகள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

> ''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு
> வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே''

சாந்தலிங்க அடிகளார் பட்டிப் பெருமான் திருக்கோயிலுக்குக் கிழக்கே நொய்யல் என்று சொல்லப்படும் காஞ்சிமா நதிக்கரையில் தவச்சாலை அமைத்துத் தவத்தை மேற்கொண்டார். அவருடைய தபோசித்தியின் பேருக எமக்கு நான்கு அருமையான நூல்கள் கிடைத்துள்ளன. அவரியற்றிய நூல்கள் கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார் என்பன. நிட்டையில் இருப்பதும் தம்மை நாடிவருவோருக்கு உபதேசம் செய்வதுமே சுவாமிகளுடைய வாழ்க்கையாக அமைந்தது. ஒரு மாசி மகத்து நாளில் சுவாமிகள் இறையருளிற் கலந்தருளினுர்.

சுவாமிகளுடைய மாணுக்கருள் சிறந்தவர் குமாரதேவர் ஆவர். இவர் சுத்த சாதகம் போன்ற நூல்களை அருளியுள்ளார். இவருடைய திருமடம் விருத்தாசலத்தில் உள்ளது. குமாரதேவருடைய மாணுக்கர் சிதம்பர சுவாமிகள் ஆவர். இவருடைய திருமடம் திருப்போரூரில் உள்ளது. திருப்போரூர் முருகன் ஆலயத் திருப்பணியைச் சுவாமிகளே செய்தருளினுர்கள். சுவாமிகள் அருளிய திருப்போரூர்ச் சந்நிதிமுறை முருக பக்தர்களுடைய நாவிலே எப்பொழுதும் தவழ்ந்து கொண்டேயிருக்கும். சுவாமிகள் சாந்தலிங்க சுவாமிகளின் நூல்கள் நான்கிற்கும் தெளிவுரை வழங்கி உள்ளார்கள். இந்த நான்கு நூல்களும் இந்தியாவைவிட ஈழத்திலே மிகப் பிரபல்யம் அடைந்திருந்தன.

பிற்காலத்தில் சுவாமிகளுடைய சமாதி கவனிப்பாரற்றுக் கிடந்தது. சமாதிக் கோயில் கள்ளிக் காடுகளால் மூடுண்டு கிடந்தது. சுவாமிகளுடைய நூல்களைக் கற்றுணர்ந்த ஒரு சில சாதுக்கள் மட்டும் மிக அருமையாகச் சமாதியைத் தரிசித்துச் சென்றனர். பிற்காலத்தில் இச்சமாதி நிலையத்தைப் பாதுகாத்து வந்த தலைவர்களுள் இராமலிங்க சுவாமிகள் என்பவர் குறிப்பிடத்தக்கவர்.

இவர் காலத்தில் வாழ்ந்தவர் பொன்னுரங்க முதலியார். இவர் கோவை நகரத்தைச் சேர்ந்தவர். 1850ஆம் ஆண்டில் ஒருநாள் முதலியார் ஒரு கனவு கண்டார். அக்கனவின் திருக்குறிப்பினுல் கள்ளிப்பற்றையினுல் மூடுண்டு கிடந்த சாந்தலிங்க சுவாமிகளுடைய சமாதி நிலையத்தை உணர்ந்தார். கள்ளிப் பற்றைகளை அகற்றினர். பலரும் வந்து வழிபடுமாறு ஏற்றன செய்தார். அன்று தொடக்கம் இச்சமாதி நிலையம் நாளொரு வண்ணமாகச் சிறப்படையத் தொடங்கி உள்ளது.

இப்போது திருப்பேரூர் அருள்திரு சாந்தலிங்க சுவாமிகள் திருமடத்தின் தலைவராய் ஆட்சிப்பீடமேறி வீற்றிருந்தருளும் தவத்திரு இராமசாமி அடிகளார், 6–7–1973ல் தவத்திரு சாந்தலிங்க அடிகளாருடைய திருக்கோயிலுக்கு திருக்குடமுழுக்குச் செய்வித்தார்கள். அதன்பின் சாந்தலிங்க சுவாமிகள் திருக்கோயில் மிகப் பிரபல்யம் அடைந்துள்ளது. மூர்த்தி,தலம், தீர்த்தத்தோடு சாதுக்களின் தரிசன பலனும் கிடைக்க ஏதுவாயிருக்கிறது. 1973ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில், சாந்தலிங்க அடிகளார் மகா சமாதி அடைந்த நட்சத்திர தினத்தில் அடியேன் திருக்கோயிலையும் இராமசாமி அடிகளாரையும், பட்டீசுவரப்பெருமானையும், மருதமலை முருகப் பெருமானையும் தரிசிக்கும் பேறு கிடைத்தது. சாந்தலிங்க அடிகளாரின் திருவுளக் கருத்து தவத்திரு இராமசாமி அடிகளார் மூலமாக நிறைவேறி வருவது கண்டு ஆனந்தம் கொண்டோம்.

பொன்னுரங்க முதலியாருடைய திருத்தொண்டுக்குப் பின்னர் இச்சமாதி நிலையத்திற்கும் சிரவணபுரம் கௌமார மடத்திற்கும் தொடர்பு ஏற்பட்டது. கௌமார மடத்துத்

தலைவர் அருண்மிகு இராமானந்த சுவாமிகள் ஆணைப்படி அவரது மாணவர் மாணிக்க சுவாமிகள் 1907ஆம் ஆண்டில் இதன் தலைவர் ஆனார். ஆறுமுக சுவாமிகள் அவருக்குத் துணையாய் இருந்தார். இவர்கள் காலத்திலேதான் திருமடத்திற்கு நிலையான கட்டடம் அமைக்கப்பட்டது.

வழிபாட்டுக்கு உதவும் அளவில் நிலமும் மற்றும் சில வருவாய்த் துறைகளும் தேடிவைக்கப்பட்டன. சமயநெறி வளர்ச்சிக்காக ஒரு சங்கம் "சத்வித்யாசன்மார்க்க சங்கம்" என்னும் பெயரில் தொடங்கப்பட்டது. மாசிமாதத்தில் குருபூசை விழா மூன்று நாட்கள் சிறப்பாக நடத்தப்பட்டது. இம்மடத்தின் திருப்பணியினால் கோவை நகரத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ளோர் பலர் தமிழ்ப் புலமையும், சமய உணர்வும் வாய்க்கப்பெற்றனர். தமிழகத்தில் வீர சைவத் திருமடங்களின் வரிசையில் சாந்தலிங்கர் திருமடம் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றது.

மாணிக்க சுவாமிகளுக்குப் பின்னர் ஆறுமுகசுவாமிகள் 1938ஆம் ஆண்டில் திருமடத்தின் தலைவர் ஆனார். இவர்கள் 1950ஆம் ஆண்டில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களை இத்திருமடத்தின் இளையபட்டத்தில் நிறுவினார்கள். தவத்திரு இராமசாமி அடிகளார் 1967ஆம் ஆண்டு பட்டம் ஏற்று மிகச்சிறப்புற நடத்திவருகிறார்கள். இம்மடாலயத்தின் வளர்ச்சியில் இராமசாமி அடிகளார் ஒரு திருப்புமையமாக அமைந்துள்ளார்கள். அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து தொண்டு பெருக அருளவேண்டுமென்று பட்டீஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

"தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே"

—அப்பரடிகள்

# சமய மலர்ச்சி

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

பழங்காலம் முதலே மனிதனுக்குத் தன் வாழ்வில் ஒழுங்கு, அமைதி, நீதி, இன்பம், அன்பு ஆகியவை இருத்தல் வேண்டும் என்ற ஆர்வம் அவனை அறியாமலேயே அவனுள் ஏற்பட்டது. இந்த ஆர்வத்தின் தூண்டுதலே சமயமாக மலர்ந்தது.

சமயம் மனிதனின் உள்ளத்தைச் சமைத்துப் பக்குவப் படுத்துவது. அவனுடைய வாழ்வில் நிகழும் ஆவேச உணர்வு, பரபரப்பு உணர்வு, பிறருக்குத் துன்பம் இழைக்கும் தீய உணர்வு ஆகியவற்றை அடக்கி, அவனை நல்வாழ்க்கைக்குப் பக்குவப்படுத்துவது சமயம். மற்றவர்க்குப் பயன் படுமாறு வாழ்பவனே—பிறருக்குத் தொல்லை கொடுக்காமல் வாழ்பவனே முதிர்ந்த சமய வாழ்வு உடையவனுவான்.

நம்முடைய சமய வாழ்க்கைக்காகச் சென்ற காலத் தலைமுறை திருக்குறளைத் தந்தது. திருமுறைகளைத் தந்தது. எல்லாம் தந்தது. தராதது ஒன்றும் இல்லை. மனிதனது படைக்கும் ஆற்றலினுல் ஒருதலைமுறைக்கும், மற்றொரு தலைமுறைக்கும் தொடர்ச்சி உண்டாகிறது. நிகழ் காலத் தலைமுறையினராகிய நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம். வரும் தலைமுறையினருக்கு நாம் என்ன படைத்துக் கொடுக்கப் போகிறோம் என்று சிந்தித்தல் வேண்டும்.

சமய வாழ்க்கைக்கு நம் ஐம்பொறிகளைப் பக்குவப் படுத்தல் வேண்டும். ஐம்பொறிகள் மனிதனுக்குத் துணையும் செய்யும். துன்பமும் செய்யும். சந்தர்ப்பம் பார்த்து இப்பொறிகள் நம்மைத் துன்பப்படுத்தும்.

நம் பொறிகளைப் பக்குவப்படுத்துமுன் நம்மை அறிதல் வேண்டும். நம்மை இயக்கும் தலைவனை அறிதல் வேண்டும்.

மனிதன் தன்னை அறிய முடியாத நிலையில் இருக்கிறன். "இருகையானையை ஒத்திருந்தது என் உள்ளக்கருவை யான் கண்டிலேன் கண்டது எவ்வமே" என்றுர் மணிவாசகர். யானை தன் உருவைத் திரும்பிப் பார்க்க இயலாதது. நாமும் அப்படித்தான் இருக்கிறேம். அதுமட்டுமன்றி யானை தன்னைச் செலுத்தும் பாகனையும் உணராது. நாமும் அவ்வாறே. நான் யார்? என் உள்ளம் யார்? என்று மணிவாசகர் அறிந்தாற்போல் அறிதல் வேண்டும். "மக்களே போல்வர் கயவர்" என்றுர் திருவள்ளுவர். நாம் மனித உருவில் விலங்குகளாக வாழ்கிறேம். நம் வாழ்வைத் திரும்பிப் பார்த்தல் வேண்டும். நாம் அறியாமையில் இருக்கிறேம். இருளில் இருக்கிறேம் என்று அறிந்தால் — அறிவு தேவை; ஒளி தேவை என்ற உணர்வு தோன்றும். நோயை அறிந்தவனுக்கு மருந்து தேவை என்ற உணர்வு தோன்றுவது போல, இந்த உணர்வு தோன்றிய போதே மனிதனுக்குச் சமய வாழ்வின் தேவையும் அருமையும் புலப்படுகின்றன. இந்த உணர்வு நிலைத்திருக்க வேண்டும். இந்த உணர்வு தோன்றிய பின்னரும் சிலர் பழைய விலங்கு நிலைக்குத் திரும்பி விடுவதுண்டு. இதில் மிக விழிப்பாக இருந்து தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும்.

நாம் பிறர்க்குத் துன்பம் செய்யாதிருந்தால் பிறர் நமக்குத் துன்பம் செய்யார். அதுவே சமய வாழ்வின் அடிப்படை. உலகில் துன்பத்தை எதிர்த்துப் போரிட மனிதன் கண்ட நெறி சமய நெறி. சமய நெறியில் நின்று வாழ்வை ஒழுங்குபடுத்திக் கொண்டால் துன்பம் வராது. நல்ல சமய வாழ்வு உள்ள நாட்டில் சட்டப் புத்தகங்களுக்கு வேலை இல்லை. வேத புத்தகங்கள் செல்வாக்கு இழந்த நாட்டில் வேந்தனும் கொடிய அரசியல் நடத்த வேண்டி இருக்கும். இப்பொழுது சமயம் சமுதாயத்தின் ஒரு பகுதியாகத்தான் கருதப்படுகிறது. இந்நிலை மாறவேண்டும். முழுவதிலும் சமயம் ஊடுருவி நிற்றல் வேண்டும்.

நாம் புதுமையை விரும்புகிறேம். பழமை தீயதன்று. இறைவனைப் "பழையோன்", "முன்னைப் பழம் பொருட்கு

முன்னைப் பழம் பொருள்'' என்கிறோம். பழைய அடிப்படையை மாற்றாமல் புதுமையை மேற்கொள்கிறோம். பழைய கோவிலைப் புதுப்பித்துக் குடநீராட்டுவிழா செய்தல் போல சமய சமுதாயத்தையும் புதுப்பிக்கும் நல்ல தொண்டினை நாம் செய்தல் வேண்டும். சமுதாயத்தில் இடைக்காலத்தில் வந்து கலந்துள்ள நஞ்சு உணர்வுகளை மாற்ற வேண்டும்.

கோயிலைத் தழுவிய குடும்பங்களும், குடும்பங்களைத் தழுவிய கோவிலும் அமைகிற சமுதாயத்தை உருவாக்குவதே நம்பணியின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். இத்திருத்தொண்டில் முயலும்போது பல இன்னல்கள் ஏற்படலாம். அவற்றிற்கெல்லாம் தளராமல் வெற்றிகாணும்வரை உழைக்க வேண்டும்.

## ஏனிந்த வாழ்வு?

(சி. நல்லையா)

இன்றைய மக்கள் அநேகமாக விரும்புவது உலக ஆசைகளைத்தான். எமது மக்கள் ஐந்து விடயங்களை மிக மிக விரும்புகிறார்கள்; ஐந்து விடயங்களை மறந்துவிடுகிறார்கள்.

அதாவது! உயிரோடு இருக்கத்தான் விரும்புகிறார்கள்; மரணத்தை மறக்கிறார்கள். பொருளுக்கு ஆசைப்படுகிறார்கள்; ஆனால், பொருள் நிலையற்றது; எவரிடத்தும் நிரந்தரமாக நிலைநிற்காது என்பதை மறந்துவிடுகிறார்கள். அதர்மத்தை விரும்புகிறார்கள்; ஆனால், அதர்மத்துக்கு ஆயுசு சொற்பம்; தர்மம் நீண்டாயுள் பெற்றது என்பதை மறக்கிறார்கள். மக்கள் மாடி வீடுகள் கட்டி, ஆடம்பரமாய் வாழ விரும்புகிறார்கள்; ஆனால், நாளைக்கு ஆறடி மண்ணுக்கு, அல்லது அக்கினிக்கு இரையாவோமென்பதை மறந்துவிடுகிறார்கள். அநித்திய வாழ்வுக்கு ஆசைப்படுகிறார்கள்; நித்திய வாழ்வு நினைக்கப்படுவதில்லை. இவை மக்களின் அறிவை மூடி நிற்கும் மாயையின் லீலா விநோதங்கள்.

அறிவு ஒளி எங்கும் வீசட்டும்!
அறிவுலகம் நன்கு வாழட்டும்!

# முருகதாசர் கண்ட
# முழுஞானவீரன்

[புலவர் தி. மு. சங்கரலிங்கம்]

வீரம் உடையவன் வீரன். தனக்கோ, பிறர்க்கோ சிறந்த பயனுடையதாய், எதிர்த்து வரும் பல தீய சக்திகளைக் கண்டு அஞ்சாமல் முன்னின்று போராடி வெற்றி காண்பவனையே வீரன் என்று உலகம் பாராட்டுகிறது. அன்றும் இன்றும் நடந்த போர்கள் பல. அதனில் நால்வகைச் சேனைகட்கும், போர்ப் படைகட்கும் அஞ்சாமல் போர் செய்து கொன்றும் வென்றும் வீரம் உற்றவர் பலர். போரில் புறமுதுகு காட்டாமல் இறந்தவர்களையும் வீரசொர்க்கம் உற்றனரென்று பாராட்டுகிறோம். சிலை எழுப்பி நினைவு கூர்கின்றோம். ஆனால் இந்த வீரம் ஞான வீரமாகவோ, முழுவீரமாகவோ சொல்வதற்கில்லை. நாட்டுக்கு நாடு ஏற்படுவதான அரசியற் போர் இது உலகில் பாரம்பரியமாய் நடைபெறுவதேயாம். ஆயின், முழுமையும் ஞானமும் உடைய வீரன் யார்? முதலில் ஒரு ஞான வீரனை எடுத்துக்காட்டாக அறிவோம்.

தத்துவராயர் என்பவர் ஒரு சிறந்த ஞானி. புலவருமாவர். அவர் தன்னை ஆண்டருளிய ஞானசாரியரான சொருபானந்தர் மீது 'பரணி' என்றொரு நூல் பாடினர். அதுகண்ட புலவர் சிலர் ஆணவமும் அழுக்காறும் உடையவராயினர். தத்துவராயரிடம் அணுகினர். ஆயிரம் யானையைப் போரில் வென்ற வீரனைத்தானே பரணி பாடுதல் வேண்டும். எங்கோ தனித்திருந்து தவமியற்றும் துறவி ஒருவர்மீது பரணி பாடுதல் கூடுமா என்று வினவினர். தத்துவராயர், புலவர்களே உங்கள் கூற்று முறையானதே. ஆனால், எனது ஞானசிரியர் உயிர்க்கொலையைக் கனவிலும் விரும்பாதவர்; செய்யாதவர். சாதாரணமான யானையைக் கூரியபடையாற் கொல்வது ஒரு வீரமன்று. தன்னைச் சார்ந்தாரையெல்லாம் கெடுக்கின்ற அழுக்காறெனும் ஒரு பாவியையும், தானேயாவுங் கற்றவ

னென்று அகங்கரிக்கின்ற ஆணவம் என்ற பாவியையும், தன் திருவருட்பார்வையான ஞானவாளாற் கொன்று, ஞானம் வழங்கும் அருள்வீரனுவான் என்றனர். வெறும் கொலை வீரனையே பாடிப்படிக்கும் நீவிர் குருநாதர் சந்நிதியை அணுகின் அறியலாம் என்றனர். சரியென ஒப்பி அனைவரும் சொரூபானந்தர் இருக்கும் தவச்சாலையை அணுகினர்.

இந்நிகழ்ச்சியை இருந்த இடத்திலிருந்தே அறிந்தார் சொரூபானந்தர். குருநாதரான அவர் முன் வந்தவரனைவரும் அவர் திருக்கண்ணோக்கம்பட்ட அளவில் எப்படியெப்படி இருந்தனரோ அதேநிலையில் அசைவற்று எழுதிய ஓவியம் போல இருந்தனர். சதானந்தநிட்டையில் மனம் நின்றது. இந்த நிருவிகற்ப நிட்டையின் நிலையறியாதார் குருநாதரால் இறந்துபட்டனர் என்று கவன்றனர். எத்தனை காலமோ தவஞ்செய்தாலும் வராத நிட்டையை, கணப்போதிற் சொரூபானந்தர் எளிதில் வரச்செய்தனர். பின் உலக நிலைக்கு மீண்டுவர அருளினர். இது கண்ட புலவர் சிலர் அவரிடம் துறவு பெற்றவரும், இல்லற ஞானியாய்ப் புளியம்பழம் போலிருந்தவர் சிலருமாயினர். தத்துவராயரிடம் பணிந்து மன்னிப்புப் பெற்றனர். இவர் ஞானவீரர்.

முதலில் முழுஞானவீரனை ஆராய்வோம். அவ்வீரனைக் கண்ட முருகதாசரைப்பற்றி பின் அறிவோம். எங்கோ புலவர் முன் தத்துவராயர் கூறிய விவாதத்தை இருந்த இடத்திலிருந்தே அறிந்து ஆணவ மதம்பிடித்த புலவர் செருக்கை அகற்றினர். நிட்டையிற் கூட்டினர் சொரூபானந்தர். தான் ஒருவன் தன்னையும் உலகத்தையும் மறந்து, அசைவற்ற, சமாதிநிட்டையைப் பெறுவதே அரிதினும் அரிதானபோது முன்வந்த புலவர் பலரது செருக்கை மாற்றிய சொரூபானந்தர் முழுஞானவீரர் என்பதில் என்னதடை? அத்தகைய பெருநிட்டையைப் பெறற்கான வழிமுறையை எளிதில் இனிய தமிழ்நூல் வாயிலாக தனக்குப் பிற்பட்டுவரும் மாணவ உபாசகர் உணரும்படி கருணையாலளித்தவர் திருப்பேரூர் அருள்மிகு சாந்தலிங்க அடிகளார் ஆவர்.

அவர் முந்நூறு ஆண்டுகட்கு முன் பல்லாயிரம் சீடர்களுடன் வாழ்ந்தவர். துறவு நிலையை மிகமிக விளக்கி நூலியற்றியவர். ஒருவன் மேலான வீடுபேற்றைப்பெற, உயிர் இரக்கமான சீவகருணை, கடவுள் வழிபாடான பத்திநெறி, இதற்குக் குறுக்கே நின்று கெடுக்கின்ற ஆசாபாசங்களை அறுக்கின்ற வைராகம்—பேதவாதமற்ற சமரச ஞானத்தைக் காட்டுகின்ற நிட்டை இவற்றை விளக்கும் நூல்கள் நான்கு. அவை, கொலை மறுத்தல், வைராக்கியசதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார் என்ற பெயருடையன. முத்திவீட்டுக்கு இந்த நான்கு நூல்களும் நான்கு தலைவாயில் என்பர் தண்டபாணி சுவாமிகள்.

அடிகள் அருளிய நான்கு அருள் நூல்களை நுனித்தறிபவர்கட்குக் கருணை உண்டாம். இறையருட்பத்தி வரும். பாசபந்தம் விலகும். சமரச ஞானம் எய்தும். இதனைத்தான் முழுக்க முழுக்க ஆராய்ந்தறிந்து அந்நூலின் அருமையையும், அதை அருளிய அடிகளாரையும் உள்ளபடி வாயார, மனமாரப் புலவர் புராணத்திற்பாடி மகிழ்கின்றார் தண்டபாணி சுவாமிகள் என்ற அருள்மிகு முருகதாச சுவாமிகள்.

---

இறைவன் என்றும் உள்ளவன்; எங்கும் நிறைந்தவன்; அண்டத்திலும் இருப்பவன்; பிண்டத்திலும் இருப்பவன். அடியார் மனதிற் குடியிருப்பவன். அருபியாயினும் உருவத்தொடு வந்து பக்தர்களைப் பரவசப்படுத்துபவன். என்றும், எவர்க்கும் இன்பமே அருளுபவன்.

அந்த ஈசனின் அழகை, அருளை, ஆடலை அனுபவித்து ஆனந்தமுற்ற பெரியார்கள் பெருமை பேசவும் பெரிது. அவர்கள் பரம்பொருளின் பாதமலரைத் தலைமேற் சூடிப் பரவிப் பணிந்தனர். அவர்தம் உள்ளத் தடாகத்தில் அன்புநீர் ஊற்றெடுத்துப் பொங்கித் ததும்பியது. அங்கே சுகந்தமான மலர்கள் விரிந்தன. அவற்றையெல்லாம் பாமாலையாகப் புனைந்து, ஆண்டவனுக்குச் சூட்டி ஆனந்த மடைந்தனர். என்னே அவர்கள் இன்பம்! அந்த இன்பத்திற் றவழ்ந்து வந்த தீந்தமிழ்த் திருமுறைகளிற்றான் எத்தனை தெய்வீகம் கமழ்கின்றது!

—சுவாமி சச்சிதானந்தா

# சிரத்தை

(சுவாமி சிவாநந்தா)

(தமிழ் ஆக்கம்: கு. அம்பலவாணபிள்ளை)

தேவவாக்காகும் பழைய வேதங்கள், சிரத்தை-பக்தி—தியான யோகத்தால் கடவுளை அடையலாம் என்று கூறுகின்றன. இவைகளுள் சிரத்தை, அதாவது நம்பிக்கையுடன் கூடிய விஸ்வாசம் பிரதம விடயத்தைப்பெறுகின்றது. விஸ்வாச மில்லாவிடத்து கடவுளையடைவதென்பது முற்றுக முடியாத காரியம். பூரண நம்பிக்கையுடையவர்கள்தான் மனதினை ஒருவழிப்படுத்தித் தியானஞ் செய்யவியலும்.

நம்பிக்கையே தெய்வீக வாழ்க்கையின் முக்கிய அம்சமாகும். கர்ம, பக்தி, இராஜ, தந்திர, ஞானயோகங்களைப் பயிலும் மாணவர்கள் நம்பிக்கை என்னும் இந்த அடிப்படைத் தத்துவத்தை இறுகப் பற்றிக்கொள்ளவேண்டும். தீவிரமான ஆர்வம், மோட்ச நாட்டம், பக்தி, அன்பு,ஞான அனுபவம் முதலியன சிரத்தையின் விருத்தியேயாகும்.

யோகத்திலும் வேதாந்தத்திலும் சிரத்தை இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றது. இராஜயோகத்தின் தத்துவத்தை நன்கெடுத்து விளக்கிய பதஞ்சலி மகரிஷியவர்கள் சிரத்தையின் அவசியத்தை வற்புறுத்தியுள்ளார்கள். அவர் கருத்துப்படி சிரத்தை - வீரியம் - ஸ்மிருதி - சமாதி-பிரசனம் முதலியன பூரண நிலையை அடைவதற்கு நம்பிக்கை, ஞாபகசக்தி, மனதை ஒருமுனைப்படுத்தல், பகுத்தறிதல் வழிகளாகின்றன. சிரத்தையை உடைய ஒருவருக்கு ஞாபகம், வீரியம் முதலியன தாமாகவே வந்து சேர்கின்றன. இச்சக்திகளைத் துணையாகக் கொண்டு உண்மைப் பொருளை அறியும் தத்துவ ஞானத்தைப் பெறவியலும்.

இச்சந்தர்ப்பத்தில் பகவத்கீதையில் நாலாம் அத்தியாயத்தில் 39ம், 40ம் சுலோகங்களில் கூறப்படுவது நோக்கற்

பாலது:— "பூரண நம்பிக்கையை உடையோர் உண்மையான அறிவைப்பெறுவது மன்றிப் புலன்களை வெற்றிகொள்ளும் ஆற்றலையும் பெறுகின்றனர். ஞானத்தைப் பெற்ற பின் தலைசிறந்த மனச்சாந்தியையும் அடைகின்றனர். ஆனால், அறிவின்றிச் சந்தேகத்திலாழ்ந்து நம்பிக்கையுமில்லாதவர்கள் அழிவையே அடைகின்றனர். இவர்களுக்கு இவ்வுலகத்தில் மாத்திரமன்று அப்பாலுள்ள அவ்வுலகத்திலும் ஆநந்த நிலைகிடையாது".

எனவே மெய்ஞ்ஞானமும் மனச்சாந்தியும் உண்மையான நம்பிக்கையுடையோர் பெறும்பேறுகளாகும். ஆகையால் நம்பிக்கையுடன் கூடிய சிரத்தை சாதன சதுட்டையமாகும். நான்கு பாதங்களை (சரியை, கிரியை, யோகம், ஞானம்) அறிதற்கு இன்றியமையாத அறுவகைக் கற்பு நெறிகளில் பிரதம அம்சமாகவுள்ளது.

மனிதனது வாழ்க்கையில் - அவனது ஆத்மீகத்துறையிலென்ன அல்லது உலக வியவகாரத் துறையிலென்ன— பெரிய வெற்றிகரமான செயல்களைச் செய்து முடிப்பதில் மிக்க உபகாரமாக நின்று உதவி புரிவதும் சிரத்தையோ தவங்கள் புரிந்து யோகங்களைச் சாதித்துப் பெருமையடைந்த விசுவாமித்திர இருடியின் திவ்விய நிலையும், யுத்த களத்தில் பெருவெற்றியடைந்த நெப்போலியனின் வன்மையும், தன்னடக்கத்துடன் கர்மயோகத்தை மேற்கொண்டு மகாத்மா காந்தியடிகள் செய்து காட்டிய சாதனைகளும், மேலும் பத்திபூர்வமான அச்சத்துடன் இராஜகெம்பீரமான ஆத்ம கிளர்ச்சியை யுண்டாக்கும் மிக்க தாராளமனப் பான்மையோடு மேம்பட்ட உதாரண குணசீலர்களாய் வாழ்ந்த துளசிதாஸர், இராமதாஸர்; ததாத்திரேயர், சங்கரர், வாமதேவர், ஜடவரதர் என்போர் அதியுன்னத நிலையடைந்து பெருந்தொண்டுகள் புரிவதற்குங் காரணமாயிருந்த இரகஸ்யம், அவர்கள் மாட்டுக் காணப்பட்டுள்ள நம்பிக்கையோடு கூடிய சிரத்தையே.

எத்தனையோ பக்தர்கள், முனிவர்கள், துறவிகள், ஞானிகள் என்போர் நினைக்கத்தானும் முடியாத எத்தனையோ அற்புதங்களை விசித்திரமான சாதனைகளைச் சிரத்தையாற் செய்து முடித்துள்ளார்கள். லௌகிக வாழ்க்கையில் வெற்றியடைதற்கும், கடவுளைத் தேடியடைதற்கும் தெய்வீகவுணர்ச்சியுடன் வாழ்தற்கும் சிரத்தை இன்றியமையாதது. சிரத்தையை மேற்கொண்டு, மனப்பெலமில்லாதவனை மனவுறுதியடையச் செய்யலாம்; கோழையனைத் தைரியவானுக்கலாம். சிரத்தை எதையுஞ் சிருட்டிக்க வல்ல சக்தியாகும். கடவுளில் உறுதியான நம்பிக்கை கொள்வதால் மனிதன் ஆத்மீக பெலமடைந்து தெய்வீக உணர்ச்சியுடன் ஆநந்தமாகச் சிரஞ்சீவியாக வாழலாம்.

சாதுசங்கம், கடவுட் பக்தர்கள், ஞானிகள், முனிவர்கள் என்போரது சகவாசத்தைப் பெறுவதால் சிரத்தை உறுதியடைகின்றது. பிரார்த்தனை, சீலத்தோடு கூடிய வாழ்க்கை, தியானம், சமய சாஸ்திரங்களைக் கற்றல் என்பனவற்ருலும் சிரத்தை விருத்தியடைகின்றது. துர்ச்சனர் சகவாசம், அவா, காமவிகாரம், பொருளாசை, சுற்றந்தழுவல், ஒவ்வாத உணவுகள் என்பன சிரத்தைக்கு முற்ருக மாருனவைகள். இவைகளால் விவேகம் தடுமாற்றமடைகின்றது; உண்மையை உணர்ந்துணரும் வன்மை கெடுகின்றது. ஞாபகசக்தியுங் குன்றுகின்றது. மேலும் இவைகளால் பிழையான எண்ணங்கள் கருத்துக்கள் உண்டாகி மனமானது முரணடைந்து அசுத்த நிலையை அடைகின்றது.

உண்மையான நம்பிக்கையோடு கூடிய சிரத்தையை உடைய மனிதன், பெறவியலாதது ஒன்றுமில்லை. சிரத்தையை மேற்கொண்டு வாழ்ந்த ஞானிகள் முனிவர்கள் தங்கள் வாழ்க்கையில் செய்து காட்டிய அற்புதங்கள் சாதனைகள் என்பனவற்றிற்கு அளவோ இல்லை. சிரத்தையை நாம் கைக்கொண்டு வாழ்ந்தால் அது நம்மை முற்ருக மாற்றித் தெய்வீக ஒளியையும், அன்பையும் ஆநந்தத்தையும் அடையச் செய்யும். எனவே இந்த அரிய சக்தியை நாளாந்த வாழ்க்கையில் உபயோகித்து அனுட்டித்து, சந்தேகங்களைக் களைந்து, பிரார்த்தனையையும் மேற்கொண்டு வாழ்வதே வேண்டப்படுவதாகும்.

# ஆத்ம போதனை

[மாத்தளை அருணேசர்]

(சுவாமி வேதானந்தர் என்ற துறவியொருவர் தமிழ் நாட்டில் பல ஊர்களுக்கும் சென்று ஆத்ம போதனைகள் செய்துவருகின்றார். அவர் இராமநாதபுர மாவட்டத்திலுள்ள புதுமடத்தைச் சேர்ந்தவர். அவர் ஒரு சமயம் திருச்செந்தூரில் ஆத்மபோதனை செய்த போது, சபையிலிருந்த ஒருவர் கேட்ட சில கேள்விகளும் அதற்குரிய பதில்களும் மாத ஜோதிடத்தில் வெளியிடப்பட்டிருந்தது. அது எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டிய விஷயமாதலால் இங்கு எடுத்தெழுதுகின்றேன்.)

கேள்வி: சிவன், காளி, நாராயணன், முருகன், கணபதி, ஏசு, அல்லா இவர்களிலெல்லாம் பெரிய தெய்வம் எது?

விடை: தெய்வம் ஒன்றுதான்; மக்கள் அதை அழைக்கும் பெயர்கள்தான் வேறுபடுகின்றன. கடல் ஒன்றுதான்; ஒவ்வொரு தேசங்களிலும் இடங்களிலும் அதற்குப் பெயர்கள் வேறு.

தெய்வத்தை எந்த உருவத்திலும் நாம் வழிபடலாம். நம் வழிபாட்டின் உறுதிக்கேற்ப அந்தந்த வடிவங்களில் நம் கனவிலும் நனவிலும் தோன்ற இறைவனால் முடியும். எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும் இறுதியில் நாம் அடையும் குறி முத்தியே.

என் தெய்வம் பெரிது, உன் தெய்வம் சிறிது என்று சச்சரவிடுவதெல்லாம் சிறு பிள்ளைகள் விவகாரமே யாகும். சாதன முன்னேற்றத்துக்காக அவரவர் தத்தம் இஷ்ட தெய்வங்களையே உயர்வாக எண்ணிக் கொண்டாலும், பிற

மதத்தவர்களையும் அவர்களின் தெய்வங்களையும் பழிப்பது அறிவுடைமையாகாது.

இந்து மதத்தில் நமது ஆன்றோர்கள் ஆறு தெய்வங்களை வழிபடலாம் என வகுத்து, அதற்கு ஷண்மதங்கள் (அறு சமயம்) எனப் பெயரிட்டுள்ளனர்.

சூரிய நாராயணன், கணபதி, சிவன், சத்தி, மகா விஷ்ணு, முருகன் முதலிய ஆறு தெய்வங்களில் ஏதாகிலும் ஒன்றை நம் இஷ்ட தெய்வமாக வழிபடுதல் நல்லது.

கே: ஞானிகளும், மகான்களும், சித்தர்களும் அதிகமாகத் தோன்றுவது எந்த மதத்தில்?

வி: ஒரு மரத்தின் பயனை அது தரும் பழங்களிலிருந்து கணித்து விடலாம். இன்று உலகத்தில் கிறிஸ்தவ மதம், இஸ்லாமிய மதம், புத்த மதம், இந்து மதம் என்ற நான்கையும் எடுத்துக் கொண்டால், அதிக அளவில் சான்றோர்களும் மகான்களும் தோன்றியது சனாதன தர்மமான நமது மதத்தில்தான்.

கே: மதச்சார்பற்ற நமது அரசாங்கத்தைப்பற்றித் தங்கள் கருத்து யாது?

வி: உலகிலுள்ள பல நாடுகள் அந்தந்த நாடுகளின் மதங்களையே சார்ந்துள்ளன. தன்னை மதச்சார்பற்ற நாடு என்று உலகுக்குக் காட்டிக் கொள்ள மட்டுமே நம் அரசாங்கம் அவ்வாறு சொல்லி வருகிறதே தவிர, நடைமுறையில் மதச்சார்பில்லாத நடுநிலையில் இயங்கி வரவில்லை.

அரசாங்கம் ஒரு சட்டம் இயற்றினால் அந்தச் சட்டம் அங்குள்ள எல்லா மதத்து மக்களுக்கும் பொதுவாய் இருக்க வேண்டுமே தவிர, குறிப்பிட்ட ஒரு மதத்தாரை மட்டும் பாதிப்பதாக இருக்கக் கூடாது. நம் அரசாங்கத்தின் பல

தாரத் தடைச் சட்டமும், கர்ப்பத்தடைச் சட்டமும் இந்துக்களை எவ்வளவு பயங்கரமாகப் பாதித்துள்ளது என்பதை உணர்ந்து பார்ப்பவர்களே அறிவார்கள்.

நமது இந்தியாவின் ஜீவநாடி ஆத்மீக வாழ்வு. இது மேலோங்கியிருந்தபோதெல்லாம் நாடு உன்னத நிலையிலும், இது சிதைவுற்ற சமயம் நாடு கீழான நிலையிலும் இருந்துள்ளதைச் சரித்திரம் கற்பவர் புரிந்து கொள்ளலாம்.

பொறுமையின் பூஷணம் நமது சனாதன தர்மம். மதத்துக்காகப் போராடுதலோ, இரத்தம் சிந்துதலோ நம்மிடம் கிடையாது. நமது மதத்தின்மேல் புதிய புதிய புத்தமதம், சமண மதம், கிறிஸ்தவ மதம், இஸ்லாம் மதம், நாஸ்திக மதம் இத்தனையையும் சமாளித்து இன்றளவும் இளமை குன்றாமல் எத்தனையோ தவசீலர்களை, யோகிகளை, ஞானிகளை ஈன்றுகொண்டிருக்கிறதென்றால் அது நம்மதத்தின் அழியாத ஆத்ம உள் வலுவையேகாட்டுகிறது.

நாம் நமது மத விஷயங்களுக்கு அரசாங்கத்தை நம்புவதைவிட நமக்குள் உள்ள போலியான சாதிப்பிணக்குகளை விட்டு எல்லோரும் ஒன்றுபட வேண்டும். ஒவ்வொரு ஊரிலும், கிராமத்திலும் உள்ள இந்துக்கள் அனைவரும் ஒரு தலைமையில் இயங்க வேண்டும். அந்தத் தலைவர்கள் தங்கள் ஒரே தலைவராக நமது ஜகத் குருவின் அருள்மொழிகளின்படி நடக்க வேண்டும். எங்களைப் போன்ற துறவிகளையும் வேதாந்திகளையும் எங்கள் போக்கில் விட்டுவிட்டு நீங்கள் ஏகோபித்த ஒற்றுமையுடன் வாழ்வதோடு, அன்றாடம் பிரார்த்தனை, தியானம், கூட்டுப்பிரார்த்தனை போன்றவற்றில் ஈடுபடவேண்டும்.

சுவாமி வேதானந்தர் தமது பிரசங்கத்தில் கூறுகிறார்:—

கடவுள் நம்பிக்கையற்றவர்கள் ஒரு கேள்வி கேட்பதுண்டு. அதாவது — கடவுள் நேரே தோன்றி, தாம் இருப்பதாகக் கூறி அவர்களை ஆட்கொண்டாலென்ன? என்பதுதான் அக்கேள்வி.

மனிதனது சிற்றறிவுக்கெட்டியவாறு இதுபோலவும், இன்னும் "கடவுள் ஏழைகளைப் பணக்காரராக்கினால் என்ன?" "சாகாமல் எல்லோரையும் உயிரோடு வைத்தாலென்ன?" என்றெல்லாம் கேட்கலாம்.

அண்டகோளங்கள் அனைத்தையும்ஆளும் அவர் பேரறிவு படைத்தவர். அவர் செயலுக்கு வியாக்கியானம் அளிக்க முடியாவிட்டாலும், இந்தக் கேள்வியைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

கடவுள் எல்லாரின் முன்பும் தோன்றிக் காட்சி கொடுத்து விட்டால் யாரும் தீய செயல்களைச் செய்ய மாட்டார்கள் என்று வைத்துக்கொள்வோம்.

காய்கறிகள் சாப்பிடுவதால் பல அணு உயிர்கள் மடிகின்றன என்று யாரும் உணவுகூட அருந்த மாட்டார்கள். இதனால் மனித இனமே சில தினங்களில் அழிந்துவிடும். அன்றி, உணவருந்தி நேர்மையுடன் வாழ்கிறார்கள் என்று வைத்துக் கொண்டாலும் தீமை செய்யமாட்டார்கள். தீமை இல்லையேல் நன்மையும் இல்லை. இருள் இல்லையேல் ஒளியும் இல்லை. அப்போது பிரளயம் வந்து விடும். அதாவது அனைத்தும் முத்தி நிலை அடைந்து விடும்.

அவனவன் தன்போக்கில் பல பிறவிகளில் பல படிப்பினைகளைப் பெற்று, பல கொள்கைகளைக் கடைப்பிடித்து, இறுதியில் உண்மையை உணர்ந்து பரம்பொருளை அடையவேண்டும் என்பதே இறைவனின் பெருந்திட்டம்.

தெய்வ அவதாரங்களான புத்தர், ஏசு, கிருஷ்ணன், இராமகிருஷ்ண பரமஹம்சர், முத்துக்குட்டி சுவாமி போன்றவர்கள் தோன்றி உண்மைகளை உரைத்தும் மனிதர்கள் திருந்தவில்லையே. தெய்வம் நேரில் தோன்றிவிட்டால் மட்டும் நம்பிவிடுவார்களா? நம்பிக்கையற்றவர்கள் நேரில் கண்டாலும் நம்பமாட்டார்கள். மன எண்ணத்தின் எழுச்சியால் நேர்ந்த ஏதோ ஒரு பொய்த் தோற்றமே தங்கள் முன் தோன்றியது என்பார்கள்.

படிப்படியாக இலட்சத்தில் ஒருவராக உண்மையை உணர்ந்து தன்னை அடைய வேண்டும் என்பதே இறைவனின் திட்டம். மொத்தம் மொத்தமாக ஆட்கொண்டுவிட்டால் உலக விளையாட்டு உடனே முற்றுப்பெற்றுவிடுமல்லவா? உலகில் நன்மை குறைவு, தீமை அதிகம்; நல்லோர் அற்பம், தீயோர் அதிகம். பஞ்சபாண்டவர் ஐவர், கௌரவர் நூறு பேர். இந்த இரண்டுக்கும் இடையில் நடக்கும் போராட்டமே வாழ்க்கை. நேர்மையும் தருமமும் அழிந்ததுபோல் தோன்றலாம். ஆனல் கடவுள் தர்மத்தின் பக்கம் இருப்பதால் அதை அழியவிட மாட்டார்.

கண்ணபிரானின் விசுவரூப தரிசனத்தை அருச்சுனன் போர்க்களத்திலே கண்டான், நலமடைந்தான். அதை துரியோதனனுதியரும் கண்டனர், ஆனல் நம்பவில்லை. ஏதோ மாயாஜாலக் குறளிவித்தை காட்டுகிருன் கிருஷ்ணன் என்ருர்கள்.

எனவே உலக நடைமுறை இப்படியே இருக்கட்டும் என விட்டுவிட்டு, நாம் தெய்வ நம்பிக்கை இல்லாவிட்டாலும் அன்பு, உண்மை, தருமம், பகுத்தறிவு, பொதுநலம், ஈகை, இரக்கம் இவற்றுடன் வாழ்ந்தால் நாம் தேடிய தெய்வத்தை நமக்குள்ளேயே காண்போம்.

## திருஞானசம்பந்தர்

அப்பர் காலத்தில் வாழ்ந்த மற்ருெரு சைவ சமயக் குரவர் திருஞானசம்பந்தர். இறை வழிபாட்டில் இவர் கடைப்பிடித்த நெறி தந்தை மைந்தன் நெறியாகும். (சற்புத்திர மார்க்கம்). நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பியவர் ஞானசம்பந்தர். இவர் பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளில் இடம்பெற்றிருக்கின்றன. இவர் சில பாடல்களில் பழமொழியைக் கருத்துக் கருவூலமாகக் கொண்டிருப்பதைக் காணலாம்.

'நெஞ்சமே! அனைவரும் வணங்கத்தக்க ஆரூர் இறைவனை வணங்குவாயாக. தேன் உண்டு இன்பமாக வாழ்கின்ற வண்டுபோல் நீ வாழ விரும்புகிருய். நீ பாம்பின் வாய்க்குள் அகப்பட்ட தேரையைப் போல் இருக்கின்ருய்' என்று ஞானசம்பந்தர் பாடியுள்ளார்.

# திருமுறைகள்காட்டும் திருநெறி

[செ. சுந்தரன், செயலன், புரசைத் திருநெறிக் கழகம், சென்னை-7.]

"திருநெறி" என்பது அழகிய நெறி — நன்னெறி. ஓர் நெறியாக உள்ள ஒரு நெறி. பெருநெறி. இறைவன்பால் ஈர்த்துச் செல்லும் ஒழுக்க நெறி. இந்நெறிகள் எல்லாம் முதல் மூன்று திருமுறைகள் அருளிய திருஞானசம்பந்தர் திருப்பாடல்களிலே நன்கு உணர்த்தப்படுகின்றன.

முதல் திருமுறையின் முதல் பதிகத்தின் ஈற்று அடியில் "திருநெறி" என்ற சொல்லினையே காணலாம். "திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை நீர்தல் எளிதாமே" என்று தெரிவிக்கின்றார்கள் திருஞானசம்பந்தப் பெருமானார். திருநெறி சம்பந்தம் உடையவர்கள் திருநெறியில் நின்று ஒழுகுபவர்கள் தமிழ் வல்லவர்களாகவும் பண்டை வினைகளை எளிதில் தீர்த்துக்கொள்ள வல்லவர்களாகவும் இருக்க முடியும் என்பது புலனாகின்றது.

அந்நெறியினை யாம் பற்றி அதன் வழிநின்று ஒழுக பன்னிரு திருமுறைப் பாடல்கள் துணை செய்யவும் வகை செய்யவும் வல்லன. நாளும் திருமுறைப் பாடல்களை ஓதுதல் அல்லது ஓதுவோரை ஓதவைத்து ஓதக் கேட்டலால் எல்லா நலன்களையும் பெறமுடியும் என்பதனை திருஞானசம்பந்தப்பெருமானே பாடும் முறையினையும் அதன் பயனையும் அவரது திருப்பதிகங்களில் நன்கு தெரிவித்துள்ளார்கள். அவைகளாவன:

"காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தம்மை நன்னெறிக்கு உய்ப்பது" என்று பாடும் முறைமையினையும் "இசை கற்று வல்லார் சொலக் கேட்டு உவந்தவர் தம்மை வாதியா வினை இம்மைக்கும் மறுமைக்கும் வருத்தம் வந்து அடையாவே", என்று பாடினால் வரும் பயனையும் தெரிவிக்கின்றார்கள்.

இனி திருநாவுக்கரசர் அருளியுள்ள 4, 5, 6 திருமுறைகளைப் பார்ப்போம். நமது உடலின்கண் உள்ள முக்கிய உறுப்புகள் ஒன்பதாகக் கருதி, ஒன்பது அடிகளில் தமது திருப்பதிகமாம் திருஅங்கமாலையில் மேற்கூறிய ஒன்பது உறுப்புக்களின் நற்செய்கைகளைப் பற்றி தெரிவிக்கின்ருர்கள்.

உடலின்கண் சிறப்பான முக்கிய உறுப்பாக விளங்குவது தலையாகும். அதனை முதல் அடியில் தலையே நீ வணங்காய்! என்று பணிக்கின்ற முறையில் தலை செய்யவேண்டிய செயலைக் குறிப்பிடுகின்ருர். பின்னர் தலையிடத்து உள்ள உறுப்புகள் செய்ய வேண்டிய மேற்கொள்ளவேண்டியவற்றைக் கீழ்க்காணும் திருப்பாடல்களில் காணலாம்.

கண்களுக்கு :- "கண்காள் காண்மின்களோ! கடல் நஞ்சுண்ட
கண்டன் தன்னை" என்றும்,

காதுகளுக்கு:- "செவிகாள் கேண்மின்களோ சிவன்
எம்மிறை செம்பவளம்" என்றும்,

மூக்கிற்கு:- "மூக்கே நீ முரலாய் முதுகாடுறை
முக்கண்ணனை" என்றும்,

வாய்:- "வாயே வாழ்த்து கண்டாய்" என்றும்,

நெஞ்சு:- "நெஞ்சே நீ நினையாய் நிமிர் புன்சடை
நின்மலனை" என்றும்,

மேலும் கைகள்:- "கைகாள் கூப்பித் தொழீர்" என்றும்,

ஆக்கை:- "ஆக்கையால் பயன் என்? அரன் கோயில்
வலம்வந்து" என்றும்,

கால்கள்:- "கால்களால் பயன் என்? கறைக் கண்டன்
உறைகோயில் கோலக் கோபுரக்
கோகரணஞ் சூழாக் கால்களால்
பயன் என்?" என்றும் தெரிவிக்கின்ருர்கள். திருநெறியினைப்பற்றி ஒழுகுவோரின் உறுப்புக்கள் செயல்பட வேண்டியவற்றை நன்கு தெரிவிக்கின்ருர்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக எல்லாச் செயல் களுக்கும் அடிப்படை நெஞ்சுதான் என்பதைத் தெரிவிக்க நெஞ்சிற்கு உபதேசம் செய்வது போன்று கூறுவதை இந்தத் திருத்தாண்டகப் பாடலிலே காணலாம். அப்பாடலிலே திருநெறி என்பது என்ன என்ற விளக்கத்தினையும் நன்கு இயம்புகின்றார்கள். அத்திருப்பாடல்,

"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்துபாடித் தலையாரக்
கும்பிட்டுக் கூத்தும் ஆடிச் சங்கரா சயபோற்றி
போற்றி என்றும் அலைபுனல்சேர் செஞ்சடை
எம் ஆதி என்றும் ஆரூரா என்றென்றே
அலறு நில்லே!"

இப்படியே திருமுறைப் பாக்கள் அனைத்தும் திருநெறியிலே செலுத்தும் அருட்பாடல்களாகும்.

"தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!"

---

## இறைவன் நாம மகிமை

கலியுகத்தில் ஆண்டவனுடைய நாமமே திவ்யாமிருதம் அடைவதற்கான மேலாம் பொக்கிஷமாகும். ஆண்டவனுடைய நாமங்களை ஜபிக்காது ஒருவரும் முத்தியடைந்ததில்லை. எனவே நீங்களும் முத்தியை விரும்புவீர்களாகில் ஜபம் செய்தே ஆகவேண்டும். உங்களது மேலாம் கடமை பரமன் புகழ் பாடுவதே. அவன் நாமத்தில் அடைக்கலம் புகுவதே. இறைவனுடைய நாமம் இதயத்தைப் பரிசுத்தப்படுத்தும். மனத்தைத் தெளிவுறுத்தும். மனதில் படிந்துள்ள சம்ஸ்காரங்கள் — வாசனைகள் — ஆசைகள் ஆகிய அழுக்குகளை நீக்கும். பாபங்களைப் போக்கும். ஜீவனை இறைவனுடன் இணைக்கும். ஜனன மரணத்தையும் ஒழிக்கும். எனவே இறைவன் நாமத்தை உறுதியாகப் பற்றிக்கொள். அதையே அடைக்கலமாகவும் கொள். கடும் சோதனைகளிலிருந்து மீளுவதற்கு நாம ஸ்மரணமே உபாயமாகும்.

ஆண்டவனிற்கும் அவனுடைய நாமத்திற்கும் வித்தியாசம் இல்லை. இரண்டும் ஒன்றே.

— சுவாமி சிவானந்தா

# "அணிமலர்க் கவிதை பாட-அருளிய தமிழ் வடிவன்!"

(குறிஞ்சித் தென்னவன்)

———:0:———

மணிமுடித் தலைகள் பத்தும்
மண்ணிலே கணத்தில் வீழ
துணித்தமால் மருக ஞானச்
சுடர்க் கொழுந் தாமமரர்
அணிக்கெலாம் தலைவன் மூவர்
அறியொணு மறைமு தல்வன்
அணிமலர்க் கவிதை பாட
அருளிய தமிழ் வடிவன்!

மணிமுடித் தலைக ளாறில்
மலர்ந்தபன் னிரு விழிகள்
கனிவுடன் நோக்க அருட்
கருணையூற் றெடுக்கும் பவப்
பிணியெலாம் கரைந்து மலப்
பேரிருள் அகலும் திருத்
தணிகை வாழ் கந்த வேளின்
தாள் துணை கொண்ட பேர்க்கே!

தேன் மணங் கமழ் குறிஞ்சி
செறியடர் கான கத்து
மான் மகள் தழுவு மெழில்
வரைத்திரு மார்பில் வாடா
பூமணம் கமழும் பைம்பொன்
புனை மணி யாரம் மின்னும்
பாமணம் கமழும் செவ்வாய்
பதமலர் பயந்த விர்க்கும்!

குறுமுனிக் கமுதத் தமிழ்
குறைவறத் தருங் கருணை
உருவினன் உம்பர் வாழ
ஒன்னலர் கூட்டந் தன்னை
செருவினில் அழித் துதவும்
சுடர்வடி வேலுடையான்
இருள்மல மகற்றி ஒளிர்
இணைப் பதம் தரும் துணைவன்

அன்னைதம் கருவில் உயிர்
ஆகியும் புவியில் வந்த
பின்னையும் இன்னாள் வரை
பேணிடும் துணைவன், கந்தன்
என்னையன் எளியன் உறும்
இன்னலை தவிர்த்த மெய்யன்
கன்னெஞ்சும் உருக அன்பு
காட்டிடும் தாய கனும்!

கயலுகழ்ந் தோடும் கங்கைக்
கரையெலாம் மருதம், செந்நெல்
வயலெலாம் கதிர் குலுங்கி
வாழ்த்துக்கள் கூறும், வண்ண
மயில்களின் ஆட்டங் கண்டு
மாங்குயில் கீதம் பாடும்
இயலிசை யாலுன் நாமம்
இறைஞ்சிடும் பக்தர் கோடி!

இருவினைத் துயரமும் மல
இருள்கெட வேல் விடுக்கும்
கருணைவல் லாளன் நெஞ்சம்
கனிந்துரு கும் மெவர்க்கும்
திருவினைச் சேர்த்து இன்பம்
சிந்தையில் நிறைக்கும் சிவ
குருவென விளங்கும் கந்தக்
குமரவேல் துணைகொண் டோர்க்கே!

சரவண பவஓ மென்று
சதமுமா றெழுத்து மந்திரம்
உரைப்பவர் உள்ளக் கோயில்
உறைபவன் உறுங்கடலின்
அரவணைத் துயில் கொள் மாலின்
மருகனின் அடிகள் போற்றிப்
பரவுவார்க் கென்றும் பகைப்
பயமிலை பாரின் மீதே!

# ஸ்ரீ மீனாக்ஷி பஞ்சரத்ன ஸ்தோத்திரம்

(ஸ்ரீ ஆதி சங்கரர் அருளியதின் முதல் சுலோகம்)

உத்யத் பானு ஸஹஸ்ரகோடி ஸத்ருசாம் கேயூரஹாரோஜ்வலாம்
பிம்ரேஷ்டீம் ஸ்மித தந்த பங்க் திருசிராம் பீதாம்பராலிங்க்ருதாம்
விஷ்ணு ப்ரம்ஹ ஸுரேந்தரஸேவிதபதாம் தத்வ்ஸவ ரூபாம் சிவாம்
மீனாக்ஷிம் ப்ரணதோஸ்மி ஸந்ததஹம் காருண்ய வாராந் நிதிம்.

மொழி பெயர்ப்பு

(ஆசிரிய விருத்தம்)

அருணோத யக்கதிர்கள் ஆயிரங் கோடியென
அதிகபிர காசமுடையாய்
ஆரமொடு கேயூர ஆபரண மேனியில்
அணிந்தேமி கச்சொலிப்பாய்
குருதியோ வென்னப்ப முத்துசசி வந்தொளிர்
கொவ்வையினை வென்ற இதழாய்
கூறெனச் சோபை யொடு குமிழுமென நகையினாய்
கோதில் பொன் னுடையுடையாய்
திருமாலொ டிந்திரன் தேவரும் பிரமனும்
தெண்டனிடு செம்பதத் தாய்
செப்புதத் துவமென்ப வத்தனையு மேதனது
திவ்யவடி வானசிவையே
கருணையின் கடலங்க யற்கண்ணி யமுதேநின்
கமழுமர விந்தவடிகள்
கடையனே னெஞ்சகத் திடையரு தென்றுமே
கருதியஞ் சலிசெய்வனே.

கோவை,
தமிழ்நாடு.

— ஐ. ஜீ. இராமநாதன்
"தேவிதாசன்"

# முப்பொருள் விளக்கம்

முப்பொருள் என்பது பதி, பசு, பாசம் எனப்படும். இவற்றின் உண்மையை முதன் முதலாக இறைவனே தட்சிணு மூர்த்தி வடிவில் கல்லால மரத்தடியில் அமர்ந்து சனகன், சனந்தன், சனுதனன், சனற்குமாரன் ஆகிய நால்வருக்கு பேசாத நிலையிலிருந்து சின் முத்திரையில் உணர்த்தினுர் என்பது வரலாறு கண்ட உண்மை. இவ்வுண்மையை வாழை யடி வாழையாக சான்ருேர்கள் உலக மக்களுக்கு உணர்த்தி வந்திருக்கின்றனர்.

பாசஞானம்: மெய்கண்டாரின் வரலாற்றினை நினைவு கூர்வோம். அருள்நந்தி சிவாசாரியார் என்பார் வேதபுராண இதிகாசமனைத்தையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த பெரியார். அவருக்கு நிகர் அவராக விளங்கினமையால் நான் என்னும் தன்முனைப்பு (பாசஞானம்) பெருக்கெடுத்தது. தன்னுடைய சொற்பொழிவுக் கூட்டத்தில் மக்கள் குறைவு ஏற்பட்ட காரணத்தை வினவியபோது மூன்று வயதுச் சிறுவனுடைய சொற்பொழிவில் திரளான மக்கள் ஈடுபடுகின்றனர் என்பதை அறிந்தார். ஒருவரும் அறியாமல் அக்கூட்டத்தின் ஒருபால் அமர்ந்து கூர்ந்து கவனித்தார். சிறுவனுடைய சொற்பொழி வின் பெருமையை குறைப்பான்வேண்டி எழுந்து நின்று மெய்கண்டாரை நோக்கி பதி, பசு, பாசம் என்பது என்ன? என வினவினுர். மெய்கண்டார் என்னும் சிறுவன் முன் பிறவியில் அனைத்தையும் கற்றுணர்ந்து செயலில் முடித்து விட்டானுகையால், அவர் விடுத்த வினுவிற்கு விடையளிப்ப தாகக் கூறி அவருக்கு நயன ஸ்பரிச தீட்சையால் தன் மனப்பெட்டகத்தில் உள்ள உபதேசப் பொருளைக் கொடுத்து பசுஞானத்தால் பதியை உணர்வாய் என, பின் அவரே பதிஞானத்தால் சித்திபெற்று சிவஞானசித்தியார் எனும் நூல் அருளினுர்.

அந்த பல்வேறு பாடல்களில் ஒன்று பாசஞானத்தை தெளிவுபடுத்துகிறது. 'பாசஞானத்தாலும் பசுஞானத்தா

லும் பார்ப்பரிய பரம்பொருளை பதிஞானத்தாலே' என்று சிவஞானசித்தியார் கூறியது போன்று வெறும் ஏட்டுக் கல்வியினுல் மட்டுமே இம்முப்பொருளுண்மையை உணர முடியாது. ஒரு மொழியாம் குருமொழியின் வாயிலாகவே உணர முடியும். 'கற்றகலையால் நிலைதான் காணுமோ' என்ருர் தாயுமானவரும். மகாராஜாதுறவு என்னும் கதையின் வாயிலாகவும் நாம் அறிவது பெற்றதாயின் பாச உணர்ச் சிக்கும் கட்டுப்படாமல் பாசஞானத்தைப் போதித்து நிலை யாமையை விளக்கினுர். பெற்றோர்கள் பாசஞானமாகிய மாயையில் சிக்குண்டு அவதரித்த நாம் முன் எத்தனையோ பிறவிகளைப் பெற்றுள்ளோம். எனவே என்னைப் பெறுதவர் கள் உலகில் எவரும் இல்லை என்று தன் தாயிடம் எடுத்துக் கூறி பாசத்திலிருந்து விடுபட்டு பதியையடையத் துறவு பூண்டார். நளன் தமயந்தி வரலாற்றிலும், தமயந்தியைக் காட்டில்விடுத்து பிரிந்து செல்லும்போது தன்மனம் பாச மாகிய மாயையின்பால் தாவி அலைமோதுவதைக் காண் கிருேம்.

எனவே பதிஞானமுள்ளவர்கள் சீவன் முத்தர்கள். சுருகு சல பட்சிணிகள்போன்று பாசத்தை விளக்கி பரஞா னத்தால் பரத்தையே பார்த்திருப்பர். கழுகு உயரப் பறந் தாலும் அதன் பார்வை கீழ்நோக்கியிருப்பதைப் போன்று சிலர் உலக எண்ணங்களிலும் பரஞான எண்ணங்களிலும் மாறிமாறிக் கிடப்பர். பலர் புழுக்கள் போன்று அறியாமை யாகிய பாசஞானத்தில் (இருளில்) மூழ்கிக் கிடப்பர். 'எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும் என் இதயமும் ஒடுங்கவில்லை' என்ற தாயுமான வரின் திருவாக்கிற்கிணங்க, பாசஞானத்தையறிந்து விடுபட கல்லால மரத்தின் கீழிருந்து உபதேசித்த தக்ஷிணு மூர்த்தியின் பெருவாக்கியமாகிய குருமொழியைப் பின்பற்று வோமாக.

(நவம்பர் 15, 16, 17 ஆகிய மூன்று நாட்களில் வண்ணை யம்பதியில் முப்பொருள் உண்மைபற்றி உயர்திரு. கோ. மு. சுவாமி அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.)

— நன்றி: யோகாஸன ஆலய விஜயம் —

# அன்பே சைவத்தின் அடிப்படை

(திரு. வி. கலியாணசுந்தர முதலியார்)

சைவசமயத்திற் போந்துள்ள சமரசப் பான்மை கண்டே எவரும் போற்றும் தாயுமான சுவாமிகளும் எச்சமயத்தை இராஜாங்கத்திலமர்ந்த சமயம் என்றும், அச்சமயமே'சமயம்' என்றும், அச்சமயத்தில் செகத்தவர் அனைவரும் சேரவேண்டும் என்றும் திருவாய்மலர்ந்தருளியுள்ளார். அத்திருப் பாடல்கள் வருமாறு:—

"இயல்பென்றுந் திரியாம லியமமாதி
எண்குணமுங் காட்டியன்பா லின்பமாகிப்
பயனருளாப் பொருள்கள் பரிவாரமாகிப்
பண்புறவுஞ் சௌபான பட்சங்காட்டி
மயலறுமந்திரஞ் சிட்சை சோதிடாதி
மற்றங்க நூல்வணங்க மௌனமோலி
அயர்வறச் சென்னியில் வைத்து ராசாங்கத்தில்
அமர்ந்தது வைதிகசைவம் அழகிதந்தோ!"

"சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டுமிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே."

எல்லாச் சமயங்கட்குந் தாயகமாயுள்ள சைவசமயத்தை நிலைநிறுத்த இத்தமிழ் நாட்டிற் றோன்றிய சமயாசாரியராகிய நால்வரும் சமரச உண்மையையே உலகத்துக்கு அறிவுறுத்தியுள்ளார். அப்பெருமக்கள் அருளிச் செய்துள்ள தமிழ் வேதத்தை முறையாகப் பொருளுணர்ந்து ஓதுவோர்க்குச் சமரச உண்மையே புலனாகும்.

சைவத்தை அன்பு சமயம் என்றுங் கூறலாம். சமரச சமயத்தில் அன்பே ஒழுகுதல் வேண்டும். சைவம், சமரச

106030



சமயம் என்பதற்கு அறிகுறி. அஃது அன்பு மயமாகப் பொலிவதேயாகும். சைவம் — சிவசம்பந்தம். சிவம் — அன்பு. சிவசம்பந்தம் — அன்பு சம்பந்தம். "அன்பே சிவம்" என்பதற்கு ஆன்றோர் உரைகள் பல உண்டு. அவற்றுள் ஒன்று:—

அன்புஞ் சிவமுமிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாருமறிகிலார்
அன்பே சிவமாவதாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப்பாரே. (திருமூலர்)

எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யாத கூட்டத்தார் இன்னார் என்பதை விளக்கும் புறச்சின்னங்கள் நீறுங் கண்டிகையுமாம். இதுகாலை, சில குடியருங் கொலைஞரும் விபூதி ருத்திராட்சம் தரித்து, அச்சின்னங்களின் மாண்பைக் கெடுத்து வருகிறார். மடங்களிலும் சிவசின்னங்களின் மாண்பு இறந்துபட்டது. ஊரை வஞ்சிப்பதன் பொருட்டே சில சகோதரர்கள் சிவ வேடம் பூண்கிறார்கள். என் செய்வது! ஈண்டு கவனிக்கற்பாலது ஒன்றே. அஃது, அன்பு நெறிக்கு அடையாளமாகவே விபூதி, ருத்திராட்ச தாரணம் தொடக்கத்தில் ஏற்படுத்தப்பட்டதென்பது.

சைவசமயத்தின் அடிப்படை அன்பேயாகும். அவ்வன்பைத் தாங்காது, சிவசின்னங்களை மட்டுந் தாங்கி, உயிர்களுக்குத் தீங்கு நினைப்பவர் சைவராகார். "எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும். இயங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்" என்ற கொள்கையில் தலைசிறந்து விளங்கும் மக்கள், எத்தேசத்தவர்களாயினும், எக்குலத்தவர்களாயினும், எச்சமயத்தவர்களாயினும், எவ்வேடத்தவர்களாயினும் — அவரனைவரும் — சைவரேயாவர். சுருங்கக் கூறின், அன்பு நெறி நிற்போர் அனைவருஞ் சைவரேயாவர் எனலாம்.

[இற்றைக்கு அரை நூற்றாண்டுக்கு முன் ''சைவசமயசாரம்'' என்ற தலைப்பின் கீழ் வரையப்பட்ட கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டவை.]

# காரைநகர் - திக்கரை

## முருகமூர்த்தி கோவில் குடமுழுக்கு

# விழா மலர்

மலரைப் பார்த்த உடனேயே கோபுரத்தைப் பின்னணியாகக் கொண்டு முருகப்பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராக முகப்பில் விளங்குவது கண்ணுக்கினிய காட்சியாகும். இந்த இனிமை விட்டுப்போகாமல் உள்ளத்திற்கு விருந்தாக உள்ளே உள்ள கட்டுரைகள் அமைந்துள்ளன.

கண்வழியாகக் கருத்திற் பதிந்த திருமுருகப்பெருமான் திருஉருவக்காட்சி கட்டுரைகள் மூலம் கருத்திற்கு விருந்தாகி உள்ளத்தை மலர வைக்கின்றன.

"கண்ணுக்கினியன, கருத்திற்கினியன நறுமண மலர்கள்" என்றாற்போல இம்மலரும் கண்ணுக்கினியதாயும் கருத்திற்கினியதாயும் விளங்குகின்றது. இந்த இனிமையை அநுபவிக்க விரும்பும் முருக பக்தர்கள் காரைநகர்–திக்கரை–முருகமூர்த்தி கோயிலுக்குச் செல்லவேண்டியதில்லை. இருந்த இடத்தில் இருந்துகொண்டு அநுபவிக்கலாம். ஐந்து ரூபாவுக்கு குறையாத நன்கொடையினை ஷ கோயில் விலாசத்திற்கு அனுப்பி வைத்தால் மலர் உங்கள் கையைத் தேடி வரும்.

கோவில் விலாசம்:

முருகமூர்த்தி கோவில்,<br>
திக்கரை,<br>
காரைநகர்.

Registered at the G. P. O. as a Newspaper M. L. 359/00

# சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்,

இந்தச் சோதியுடன் சோதி 27 ஆண்டுச் சேவையை ஆரம்பித்து 5–6ம் இதழ் வெளிவருகிறது. இன்றைய நிலையில் கடுதாசித் தட்டுப்பாடும் விலை ஏற்றமும் யாவரும் அறிந்ததே. எம்மால் இயன்றளவு ஆத்மீக சேவை செய்வதே எமது குறிக்கோள். ஆகவே சந்தா நேயர்கள் தங்கள் சந்தாக்களை பெப்ரவரி மாத இறுதிக்குள் அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும் தமது சந்தாவை உரியகாலத்தில் அனுப்பி வைப்பதோடு ஒவ்வொரு புதிய அன்பர்களைச் சேர்த்து உதவினால் ஆத்மீகம் பரவுவதற்கு உதவி செய்தவர்களாவீர்கள்.

## ஆத்மஜோதி நிலையம்,

நாவலப்பிட்டி (இலங்கை).

அச்சிடுவிப்போர்:– ஆத்மஜோதி நிலையத்தினர்.
அச்சிடுவோர்:– ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்.
வெளியிட்ட திகதி:– 14-4-75.